# SWOAD

**SOCIAL WELFARE ORGANIZATION AMPARA DISTRICT**
**அம்பாறை மாவட்ட சமூக நல்வாழ்வு அமைப்பு.**

# ஆண்டறிக்கை -2018




*T.P :- 0772242265*

*Fax :- 067-2277276*

*E.mail :- swoad@sltnet.lk*

*Website – www.swoad.lk*

## அறிமுகம்

அம்பாறை மாவட்ட சமூக நல்வாழ்வு அமைப்பானது (SWOAD) 1995ம் ஆண்டு திரு.ச.செந்துராஜா அவர்களினால் நிறுவப்பட்டு அவரின் வழிகாட்டலுடன் செயற்பட்டு வருகின்றது. அம்பாறை மாவட்டத்தில் பாதிக்கப்பட்டு நலிவுற்ற நிலையில் வாழும் மக்களின் தேவைகளை நிறைவு செய்தலை இலக்காகக் கொண்டும், சிறந்த முறையிலான சேவைகளையும் சம வாய்ப்புக்களையும் வழிமுறையாகக் கொண்டு செயற்படும் அமைப்பாகும்.

இவ்வமைப்பானது அம்பாறை மாவட்ட கரையோரப் பிரதேசங்களை மையமாகக் கொண்டு பொத்துவில், திருக்கோவில், காரைதீவு, கல்முனை, சம்மாந்துறை, நாவிதன்வெளி ஆகிய பிரதேச செயலாளர் பிரிவுகளிலுள்ள 58 கிராமக் கிளைகளில் மூவின மக்களினையும் உள்ளிணைத்து செயற்பட்டுக் கொண்டு வருகின்றது.

செயற்பாட்டு வழிமூலங்களாக 6 பிரதேச செயலாளர் பிரிவுகளில் 6 பிரதேச காரியாலயங்களையும், 52 கிராமக் கிளை அலுவலகங்களையும், அக்கரைப்பற்றில் தலைமைக் காரியாலயத்தினையும் கொண்டு, 4861 அங்கத்தவர்களையும், 86 பணியாளர்களையும் இணைத்த வகையில் **ஸ்தாபகர் திரு.சன்முகம் செந்துராசா** அவர்களின் வழிகாட்டலின் கீழ் தொடர்ந்தும் கண்காணித்து வழிப்படுத்தப்பட்டுக் கொண்டு வருகிறது.

### தொலைநோக்கு / Vision

அம்பாறை மாவட்டத்தில் உள்ள நலிவுற்ற மக்களின் அடிப்படைத் தேவைகளை அடையும் பொருட்டு சேவைகளையும் சமமான வாய்ப்புக்களையும் வழங்கும் மீயுயர் நிறுவனம்.

### பணிநோக்கு / Mission

விளைவுகள் அடிப்படையிலான வினைத்திறன் உள்ள சேவைகளை நலிவுற்ற மக்களுக்கு வழங்கும் முற்போக்கு எண்ணமுள்ள உதவுவோரையும், ஆக்கத்திறனும் மற்றவரை ஊக்குவிக்கும் திறனுள்ள பணியாளரையும் கொண்ட அமைப்பு.

### குறிக்கோள்கள்.

- ♣ அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்தலும் வறுமையை ஒழித்தலும்.
- ♣ பாதிக்கப்பட்ட பெண்தலைமைதாங்கும் குடும்பங்களினது வாழ்க்கைத் தரத்தினை உயர்த்தல்.
- ♣ பெண்களின் தலைமைத்துவத்தினையும், விழிப்புணர்வினையும் வளர்த்தல்.
- ♣ ஜனநாயக சமூகத்தில் மக்களின் பங்குபற்றுதலை விருத்தி செய்வதும் அதனை மேம்படுத்தலும்.
- ♣ அபிவிருத்தி நடவடிக்கைகள் மூலம் மக்களுக்கு தன்னிறைவான வாழ்க்கையினைப் பெறுவதற்கு வழிகாட்டல்.
- ♣ உள்ளூர் வளங்களை முழுமையாகப் பயன்படுத்துவதற்கு வழிகாட்டல்.
- ♣ வறிய மாணவர்களுக்கான கல்வி வசதிகளையும் வாய்ப்புக்களையும் வழங்குதல்.
- ♣ மனித நேயத்தினையும், சமாதான நல்லெண்ணங்களையும் வளர்த்தல்.

**இலக்குக் குழுக்கள் :**

1. பெண்கள்.
2. சிறுவர்கள்.
3. முதியோர்கள்.
4. இளைஞர்கள்.
5. பெண் தலைமைதாங்கும் குடும்பங்கள்.
6. வறிய மாணவர்கள்.
7. மிகவும் வறிய குடும்பங்கள்.
8. பாதிக்கப்பட்ட மக்கள்.
9. வெளிநாடு சென்ற குடும்பங்கள்.

**செயற்பாட்டு பிரதேசமும், அங்கத்தவர்களின் எண்ணிக்கையும்.**

| Division | No.of. Branch | Branch | Total member | No.Of. Goup |
|---|---|---|---|---|
| Navithanvely | 1 | Veppayadi | 107 | 7 |
| | 2 | Navithanwely | 87 | 8 |
| | 3 | 13M Village | 75 | 7 |
| | 4 | 15MVillage | 120 | 10 |
| | 5 | 4M Village | 117 | 7 |
| | 6 | Savalakkadai | 21 | 2 |
| | 7 | 11-3M Village | 53 | 5 |
| | 8 | 11-2M Village | 69 | 4 |
| | 9 | 12M Village | 69 | 5 |
| | | | **718** | **55** |
| Kalmunai | 10 | Kalmunai-01 | 123 | 8 |
| | 11 | Pandiruppu | 96 | 5 |
| | 12 | Kalmunai-02 | 56 | 3 |
| | 13 | Periyaneelavanai | 93 | 5 |
| | 14 | Natpittimunai 01 | 127 | 8 |
| | 15 | Natpittimunai 02 | 90 | 6 |
| | 16 | Thuravanthiyamadu | 28 | 1 |
| | 17 | Chenaikkudiyiruppu-01&2 | 151 | 9 |
| | | | **764** | **45** |
| Sammanthurai | 18 | Malwaththai-01 | 114 | 6 |
| | 19 | Malwaththai-02 | 104 | 7 |
| | 20 | Valathapiddy | 98 | 5 |
| | 21 | Madtharavai | 36 | 3 |
| | 22 | Veeramunai | 138 | 8 |
| | 23 | Sorikkalmunai | 166 | 10 |
| | | | **656** | **39** |
| Karaithivu | 24 | Karaitivu - 01 | 49 | 2 |
| | 25 | Karaitivu - 02 | 110 | 3 |
| | 26 | Karaitivu - 03 | 100 | 4 |
| | 27 | Karaitivu - 04 | 116 | 5 |
| | 28 | Karaitivu - 05 | 163 | 8 |
| | | | **538** | **22** |

| | | | | |
|---|---|---|---|---|
| Thirukkovil | 29 | Thirukkovil -01 | 89 | 4 |
| | 30 | Thirukkovil -02 | 126 | 7 |
| | 31 | Kancikudiyaru | 86 | 5 |
| | 32 | Thambiluvil -01 | 118 | 5 |
| | 33 | Munaiyoor | 117 | 7 |
| | 34 | Thambiluvil -02 | 171 | 8 |
| | 35 | Thampaddai | 112 | 7 |
| | 36 | Mandanai & Kudinilum | 91 | |
| | 37 | Vinayakapuram-01 | 63 | 3 |
| | 38 | Vinayakapuram-04 | 113 | 5 |
| | 39 | Vinayakapuram-02 | 92 | 5 |
| | 40 | Vinayakapuram-03 | 87 | 4 |
| | 41 | Gayathrikiramam 1 | 109 | 7 |
| | 42 | Gayathrikiramam 2 | 54 | 4 |
| | 43 | Thandiyadi | 175 | 11 |
| | | | **1603** | **82** |
| Pottuvil | 44 | Komary -01 | 55 | 2 |
| | 45 | Komary -02 | 62 | 3 |
| | 46 | Uoorany | 27 | 2 |
| | 47 | Kundumadu | 122 | 6 |
| | 48 | Vaddively | 50 | 4 |
| | 49 | Eatham | 147 | 9 |
| | 50 | Ullai | 51 | 5 |
| | 51 | R.M.Nagar | 52 | 2 |
| | 52 | Hithayapuram | 16 | |
| | | | **582** | **33** |
| | | **Total** | **4861** | **276** |

# நடைமுறைப்படுத்தப்படும் திட்டங்கள்

## 01.வாழ்வாதாரத்திட்டம்.

- மக்கள் சுய தொழிலில் ஈடுபடுவதன் மூலம் வருமானத்தினை அதிகரித்து அவர்களை சுயமாகச் செயற்பட வைப்பதன் ஊடாக தன்னிறைவான மக்கள் சமூகத்தினை கட்டியெழுப்புவதை நோக்கமாகக் கொண்டு சுவாட் அமைப்பின் செயற்பாட்டுப் பிரதேசங்களான காரைதீவு, கல்முனை, சம்மாந்துறை, நாவிதன்வெளி, திருக்கோவில், பொத்துவில் ஆகிய 6 பிரதேச செயலாளர் பிரிவுகளிலிருந்தும் தெரிவு செய்யப்பட்ட 1,253 பயனாளிகளிக்கு 114,982,764.00 ரூபாய் நிதியானது சேமிப்புக் கடன் திட்டத்தின் கீழ் வாழ்வாதார தொழில்களை மேற்கொள்வதற்கு கடனாக வழங்கப்பட்டுள்ளன.

| No | Sector | 2018 | |
|---|---|---|---|
| | | No.of.Beneficiary | Amount |
| 1 | Paddy Agriculture | 192 | 25,235,000.00 |
| 2 | Business | 249 | 46,175,000.00 |
| 3 | Small Business | 65 | 4,535,000.00 |
| 4 | Fishing | 27 | 2,185,000.00 |
| 5 | High land crops | 28 | 2,270,000.00 |
| 6 | Poultry | 160 | 9,908,000.00 |
| 7 | Cattle farming | 49 | 9,325,000.00 |
| 8 | Goat framing | 19 | 1,855,000.00 |
| 9 | Brick Making | 2 | 220,000.00 |
| 10 | Sewing | 40 | 2,958,000.00 |
| 11 | Home garding | 16 | 1,480,000.00 |
| 12 | Agriculture iputs | 364 | 5,876,764.00 |
| 13 | Rice Founding | 42 | 2,960,000.00 |
| | **Total** | **1,253** | **114,982,764.00** |





- கடன் வழங்குவதோடு மட்டும் நின்றுவிடாமல், பெற்றுக்கொண்ட கடனை உரியமுறையில் பயன்படுத்தி தொழில் முயற்சிகளில் ஈடுபடுவது குறித்து பிரதேசமட்ட கள உத்தியோகத்தர்கள் மற்றும் சேமிப்புக் கடன் திட்ட உத்தியோகத்தர்களினால் ஆலோசனை வழிகாட்டல்களும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

## 02.இளையோர்களுக்கான தொழில் பயிற்சி வழங்கல். (Vocational training)

மேற்படிப்பினை தொடரமுடியாத நிலையில் பாதிக்கப்பட்டு வறுமை நிலையிலுள்ள இளைஞர், யுவதிகளுக்கு தொழிற்பயிற்சியினை வழங்குவதன் ஊடாக தொழில் வாய்ப்பிற்கான வழிகாட்டல் வழங்குவதை நோக்காக் கொண்டு WUSC நிறுவனத்தின் அனுசரணையுடன் Room Attendant Course (Steward) தொழில் பயிற்சியானது சுவாட் அமைப்பினால் நடாத்தப்பட்டது. இத்தொழில் பயிற்சியின் மூலம் 25 இளையோர்கள் பயன் பெறுள்ளனர்.




## 03.தொழில் திறன் அபிவிருத்தி. (Vocational Skill Development)

தேசிய மற்றும் மாவட்ட கட்டமைப்புக்களை வலுப்படுத்தி தொழில் வழிகாட்டல், ஆற்றுப்படுத்தல்கள் ஊடாக புலம்பெயர் தொழிலாளர்கள் தரமான தொழில் வாய்ப்புக்களை பெற்றுக்கொள்வதற்கு பங்களிப்புச் செய்யும் பொருட்டு SLMP செயற்திட்டத்தின் கீழ் புதிதாக உள்வாங்கப்பட்டுள்ள இத்திட்டச் செயற்பாடுகள் குறித்து அரச பங்குதாரர்களுக்கும், திட்ட பணியாளர்களுக்கும் தெளிவுபடுத்தும் கூட்டமானது 03.04.2018ம் திகதி சுவாட் தலைமைக் காரியாலயத்தில் சுவாட் அமைப்பின் தலைவர் திரு.பரமசிங்கம் அவர்களின் தலைமையில் ஆரம்பிக்கப்பட்டு நிகழ்ச்சித்திட்ட முகாமையாளர் திரு.பிறேமலதன் அவர்களினால் முன்கொண்டுசெல்லப்பட்டது.

இக்கலந்துரையாடல் கூட்டத்திற்கு மாவட்ட இளைஞர் சேவைகள் உத்தியோகத்தர், மனித வள அபிவிருத்தி உத்தியோகத்தர், வெளிநாட்டு வேலைவாய்ப்பு உத்தியோகத்தர், திறன் அபிவிருத்தி உத்தியோகத்தர் ஆகியோகர்களின் மாவட்ட இணைப்பாளர்கள், இலங்கை தொழிற்பயிற்சி அதிகார சபையின் நிந்தவூர் மாவட்ட தொழிற்பயிற்சி நிலையத்தின் உதவி பணிப்பாளர், தேசிய பயிலுனர் மற்றும் கைத்தொழில் பயிற்சி அதிகார சபையின் (NAITA) கல்முனை பிராந்தியத்தின் அலுவலக உத்தியோகத்தர், SDC அமைப்பின் தேசிய திட்ட உத்தியோகத்தர் திரு.பிரகாஸன் மற்றும் VSD பிரிவின் ஆலோசகரான திரு.ஜெயந்த செனவிரத்ன ஆகியோர்கள் கலந்துகொண்டிருந்தனர்.





தொழில் திறன் அபிவிருத்தி செயற்திட்டத்தின் கீழ் தெரிவுசெய்யப்பட்ட பொத்துவில், திருக்கோவில், ஆலையடிவேம்பு, அக்கரைப்பற்று, அட்டாளைச்சேனை, நிந்தவூர், காரைதீவு, கல்முனை, நாவிதன்வெளி, சம்மாந்துறை, இறக்காமம் ஆகிய 11 பிரதேச செயலாளர் பிரிவுகளிலிருந்தும் பயிற்றப்பட்ட 815 அரச அதிகாரிகள், கிராமிய மட்ட அமைப்புக்கள், பாலர் பாடசாலை ஆசிரியர்களுக்கூடாக தொழில் திறன் அபிவிருத்தி குறித்து 4585 பேருக்கு விழிப்புணர்வு வழங்கப்பட்டுள்ளதுடன், 09 பொதுவிழிப்புணர்வு பிரச்சாரத்தின் (Public campaign) ஊடாக சாராசரியாக 3000 பேருக்கு VSD தொடர்பான துண்டுப்பிரசுரங்கள் விநியோகிக்கப்பட்டுள்ளன. இதன் ஊடாக RPL, NVQ certificate குறித்த தொழில்துறை பயிற்சிகளை பெற்றுக்கொள்வதற்கு 235 பேர் விண்ணப்பித்துள்ளனர்.





**தொழில்திறன் அபிவிருத்தி செயல்திட்டத்தின் கீழ் பொருத்தமான பயனாளிகளை தெரிவு செய்வதற்கான Pre Counseling அமர்வு.**

தொழில்திறன்களைப் பெற்று வெளிநாடு செல்ல எதிர்பார்த்திருக்கும் புலம்பெயர் தொழிலாளர் குடும்பங்கள் மற்றும் வெளிநாட்டிலிருந்து மீளத்திரும்பிய தொழிலாளர்களுக்கு தொழில் திறன்கள் தொடர்பான வழிகாட்டல் ஆலோசனைகளை வழங்கும் நோக்குடன் தொழில்துறை பயிற்சிகளுக்கு விண்ணப்பிக்கப்பட்ட 235 பேருக்கும் Pre counselling ஆனது மேற்கொள்ளப்பட்டு இதில் 162 பேர் பொருத்தமான பயனாளிகளாக தெரிவு செய்யப்பட்டுள்ளனர். இவர்களில் தற்போது 34 பேர் NAITA நிறுவனத்தில் RPL ஊடாக தொழில் திறனை மதிப்பீடு செய்து NVQ சான்றிதழ் பெற்றுக்கொள்வதற்கு ஒருங்கிணைக்கப்பட்டுள்ளனர்.

22 பேர் தொழிற்பயிற்சிகளுக்காக தெரிவு செய்யப்பட்டுள்ளதுடன் இவர்களில் 5 பேர் மாத்திரமே தற்போது பயிற்சிக்கு சென்று கொண்டிருக்கின்றனர். ஏனைய பயனாளிகள் பயிற்சிகளுக்கு செல்வதற்கு தயராக இருக்கின்றனர்.





# 04.சிறுவர் அபிவிருத்தித் திட்டம்.

**4.1: பாலர் பாடசாலை நடாத்தல். :** சிறுவர் அபிவிருத்திச் செயற்திட்டத்தின் கீழ் அமைப்பின் செயற்பாட்டுப் பிரதேசங்களான திருக்கோவில், சம்மாந்துறை, நாவிதன்வெளி ஆகிய பிரதேசங்களில் 15 பாலர் பாடசாலைகள் இயங்கி வருகின்றன. இப் பாலர் பாடசாலைகளில் 29 ஆசிரியர்கள் கற்பித்து வருவதுடன் 415 சிறார்கள் கல்விகற்றும் வருகின்றனர்.

**பாலர் பாடசாலை பற்றிய விபரம்.**

| No | Division | Village | School Name | Regd Number | Student 2018 |
|---|---|---|---|---|---|
| 1 | Navithanveli | Savalagadai | Vikneswara | EPC/PSEV/AM/NAV/T/666 | 15 |
| 2 | Navithanveli | 11th Colony | Barathy | EPC/PSEV/AM/NAV/T/663 | 20 |
| 3 | Navithanveli | 7th Village | Barathy | EPC/PSEB/AM/NAVT-667 | 32 |
| 4 | Navithanveli | 15th Colony | Valluvar | EPC/PSEB/AM/NAVT-662 | 41 |
| 5 | Navithanveli | 13th Colony | Kajamuga | EPC/PSEB/AM/NAVT-665 | 20 |
| 6 | Navithanveli | Cenral Camp -01 | Elanko | EPC/PSEB/AM/NAVT-664 | 18 |
| 7 | Navithanveli | Navithanveli | Saraswathy | EPC/PSEB/AM/NAVT-668 | 28 |
| 8 | Thirukovil | Thirukovil-02 | Annai | EPC/PSEB/AM/TKL/T/613 | 56 |
| 9 | Thirukovil | Vinayagapuram-04 | Kanthy | EPC/PSEB/AM/TKL/T/615 | 25 |
| 10 | Thirukovil | Vinayagapuram-02 | Saraswathy | EPC/PSEB/AM/TKL/T/616 | 29 |
| 11 | Thirukovil | Thambiluvil-01 | Sai | EPC/PSEB/AM/TKL/T/610 | 20 |
| 12 | Thirukovil | Thampaddai-01 | Namagal | EPC/PSEB/AM/TKL/T/609 | 18 |
| 13 | Thirukovil | Thambiluvil-02 | Kalaimagal Amman | EPC/PSEB/AM/TKL/T/612 | 35 |
| 14 | Thirukovil | Thambiluvil-01 | Vipulanantha | EPC/PSEB/AM/TKL/T/611 | 21 |
| 15 | Sammanthurai | Valathapidy | Saraswathy | EPS/PSEB/AM/SAM/T/669 | 37 |
| **Total** | | | | | **415** |

**4.2: மாணவர்களுக்கான விடுகை விழா மற்றும் கலை நிகழ்வுகள், விளையாட்டுப்போட்டிகள், சிறுவர்தின நிகழ்வுகளை நடாத்தல்.**

கல்வி கற்றுவரும் சிறார்களின் திறன், ஆற்றல்களை வெளிக்கொண்டு வரும் நோக்கில் பாலர் பாடசாலை மாணவர்களுக்கான விடுகைவிழா மற்றும் கலை நிகழ்வுகளும், விளையாட்டுப்போட்டிகளும் பிரதேச மட்டத்தில் சகல பாடசாலை மாணவர்களையும் ஒருங்கிணைத்து நடாத்தப்பட்டு வருகின்றன.

திருக்கோவில் பிரதேசத்தில் செயற்பட்டுவருகின்ற சுவாட் அமைப்பின் 7 முன் பாலர் பாடசாலை மாணவர்களையும் ஒருங்கிணைந்த விளையாட்டுபோட்டி நிகழ்வானது 05.04.2018ம் திகதி விநாயகபுரம் மின்னொளி விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது. இந் நிகழ்வில் திருக்கோவில் பிரதேச சபை தவிசாளர் R.W.கமல்ராஜன், திருக்கோவில் கோட்டக்கல்விப் பணிப்பாளர், முன்பள்ளி இணைப்பாளர், சுவாட் அமைப்பின் தலைவர் திரு.வ.பரமசிங்கம், பாலர் பாடசாலை கல்விப்பணியக வெளிக்கள உத்தியோகத்தர் திரு.P.மோகனதாஸ் உற்பட பலர் அதிதிகளாக கலந்துகொண்டனர்.

**விளையாட்டுப்போட்டி**






**சிறுவர்தின நிகழ்வு**






**ஆசிரியர்தின நிகழ்வு.**






**4.3: பெற்றோர் நிர்வாகத்திற்கான மாதாந்த ஒன்றுகூடல் நடாத்தல்:-**

மாணவர்களின் கல்வி முன்னேற்றங்கள், குறைபாடுகள் குறித்தும், கல்வி மேம்பாட்டில் பெற்றோரின் பங்களிப்பு தொடர்பாகவும் மாதாந்தம் பெற்றார் நிர்வாக்கூட்டம் அமைப்பினால் நடாத்தப்பட்டு கல்வி மேம்பாடு குறித்து பல தீர்மானங்களை மேற்கொண்டு அவற்றினை அமுல்ப்படுத்துவதற்கான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**4.4: பாலர் பாடசாலை ஆசிரியர்களுக்கான மாதாந்த கலந்துரையாடல் நடாத்தல்.**

ஆசிரியர்களின் கற்பித்தல் முறைமையினை மேம்படுத்தும் நோக்கில் முன்பள்ளி ஆசிரியர்களுக்கான மாதாந்தக் கலந்துரையாடல்கள் நடாத்தப்பட்டு வருகின்றன. இக்கலந்துரையாடலின்போது ஆசிரியர்களினால் எதிர் நோக்கப்பட்ட பிரச்சினைகள் குறித்தும், தேவைகள் குறித்தும் ஆராயப்பட்டு அவற்றுக்கான தீர்வுகளும் வழங்கப்பட்டுவருகின்றன.






**4.5: பாலர் பாடசாலை ஆசிரியர்களக்கான திறன் மேம்பாடு பயிற்சி நடாத்தல்.**

அந்தவகையில் WUSC நிறுவனத்தின் நிதி அனுசரனையுடன் முன்பள்ளி ஆசிரியர்களுக்கான சமூக அணிதிரட்டல் மற்றும் பால்நிலை சமத்துவம் தொடர்பிலான விழிப்புணர்வு கருத்தரங்கானது 24.03.2018ம் திகதி அக்கரைப்பற்று சுவாட் தலைமைக்காரியால பயிற்சிமண்டபத்தில் சுவாட் அமைப்பின் தலைவர் திரு.வ.பரமசிங்கம் அவர்களின் தலைமையில் ஆரம்பிக்கப்பட்டு WUSC நிறுவனத்தின் நிகழ்ச்சித்திட்ட உத்தியோகத்தர் திரு.S.யேசுசகாயம் மற்றும் சுவாட் அமைப்பின் நிகழ்ச்சித்திட்ட மகாமையாளர் திரு.க.பிறேமலதன் அவர்களினால் முன்கொண்டு செல்லப்பட்டது. இக்கருத்தரங்கில் 95 முன்பள்ளி ஆசிரியர்கள் கலந்துகொண்டனர்.





## 05.பாதுகாப்பான புலம்பெயர் தொழிலாளர் நிகழ்ச்சித்திட்டம்.

சுவாட் நிறுவனத்தின் நிதி வழங்கும் நிறுவனங்களில் ஒன்றான சுவிஸ் முகவர் அமைப்பின் (Swiss Development Cooperation -SDC) நிதி உதவியுடன் செயற்படுத்தப்பட்டு வருகின்ற தொழிலாளர்கள் பாதுகாப்பாக புலம் பெயர்வதற்கான வழிகாட்டல் (Safe labor migration) திட்டமானது அம்பாரை மாவட்டத்தில் உள்ள பொத்துவில், ஆலையடிவேம்பு, அக்கரைப்பற்று, அட்டாளைச்சேனை, நிந்தவூர், காரைதீவு, கல்முனை, சம்மாந்துறை, இறக்காமம், உகண ஆகிய 10 பிரதேச செயலாளர் பிரிவுகளிலுள்ள 149 கிராமங்களில் தொழில் நிமிர்த்தம் வெளிநாடு சென்றுள்ள மற்றும் மீண்டும் நாடு திரும்பிய 8975 குடும்பங்களுடன் இவ் வேலைத்திட்டம் நடைமுறைப்படுத்தப் படுகின்றது. இத்திட்டத்தின் ஊடாக கீழ் குறிப்பிடப்பட்ட செயற்பாடுகள் இவ்வருடம் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

### 5.1:அபிவிருத்தி உத்தியோகத்தர்களுடனான மாவட்ட திட்ட மிடல் கலந்துரையாடல் நடாத்தல்.

புலம்பெயர் தொழிலாளர் மற்றும் அவர்களின் குடும்பங்களின் அபிவிருத்தி தொடர்பாக 2018ம் ஆண்டில் மேற்கொள்ளப்படவேண்டிய செயற்திட்டங்கள் மற்றும் தேவைகள் குறித்த திட்டமிடல் கலந்துரையாடலானது இத்திட்ட செயற்பாட்டு பிரதேச செயலாளர் பிரிவுகளில் பணியாற்றும் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மற்றும் அபிவிருத்தி உத்தியோகத்தர்களின் மாவட்ட இணைப்பாளர் Mr.A.M.Farzan அவர்களையும் ஒன்றிணைத்தவகையில் நடாத்தப்பட்டது. இதில் 14 பிரதேச செயலகங்களிலிருந்தும் 38 அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டு தமது கருத்துக்களை வழங்கியிருந்தனர்.





### 5.2.பாதுகாப்பான புலம்பெயர்தல் குறித்து தகவல்களை வழங்கல்.

இத்திட்டத்தின் ஊடாக பொதுமக்களுக்கு பாதுகாப்பான புலம்பெயர் தொடர்பான தகவல்களை வழங்கும் நோக்கில் அரச உத்தியோகத்தர்கள், தொண்டர்கள் மற்றும் சிவில் அமைப்புக்களின் பிரதிநிதிகள் மற்றும் பணியாளர்கள் 1416 பேருக்கு பாதுகாப்பான புலம்பெயர்தல் தொடர்பில் பயிச்சியளிக்கப்பட்டு அவர்களைக்கொண்டு இத்திட்ட செயற்பாட்டுப்பிரதேசங்களில் பிரச்சார நிகழ்வுகள், துண்டுப்பிரசுரங்கள், வீட்டுத்தரிசிப்பு, தகவல் நிலையம், பதாகைகள், வீதி நாடகங்கள் ஊடாக 3624 குடும்பங்களுக்கு பாதுகாப்பான முறையில் புலம்பெயர்தல் குறித்து தகவல்கள் வழங்கப்பட்டுள்ளன. இதன் மூலம் இவ்வாண்டு இத்திட்டப்பிரதேசங்களிலிருந்து 384 பெண்கள் குடும்பபின்னணி அறிக்கையினை பிரதேச

செயலகங்களிலுள்ள வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சு உத்தியோகத்தர்கள் ஊடாக பெற்று பாதுகாப்பான முறையில் வெளிநாடுசெல்வதற்கான நடவடிக்கையினை மேற்கொண்டுள்ளனர்.





**5.3.புலம்பெயர் தொழிலாளர் நலன்புரி சங்கங்களை அமைத்தல்.**

கிராம மட்டத்தில் புலம்பெயர் தொழிலாளர்கள் மற்றும் அவர்களின் குடும்பங்களின் நலன்புரி , உரிமைகள் சார்ந்த விடயங்கள் தொடர்பாக மாவட்ட மற்றும் தேசிய ரீதியில் குரல் கொடுக்கும் நோக்கில் கிராம மட்டத்தில் 127 புலம்பெயர் குழுக்கள் உருவாக்கப்பட்டு இக்குழுக்களைக்கொண்டு 9 பிரதேச செயலாளர் பிரிவுகளில் 30 புலம்பெயர் தொழிலாளர் நலன்புரி சங்கங்கள் இத்திட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்டுள்ளன. இச்சங்கங்கங்கள் மாதாந்த சேமிப்புக்களை மேற்கொள்ளல், புலம்பெயர் தொழிலாளர் குடும்பங்கள் உற்பத்திசெய்யும் பொருட்களை சந்தைப்படுத்துவதற்கான வாய்ப்புக்களை ஏற்படுத்தல், அரச சேவைகளைப் பெற்றுக்கொள்வது தொடர்பில் உரிய அதிகாரிகளை வளவாளராக கொண்டு மக்களுக்கு தெளிவூட்டல், பாதுகாப்பான முறையில் வெளிநாடு செல்வது குறித்த தகவல்களை வழங்கல், மாதாந்த கூட்டங்களை நடாத்தல், புலம்பெயர் தொழிலாளர் குடும்பங்களில் காணப்படுகின்ற தேவை, பிரச்சினைகள் குறித்து ஆராய்ந்து அவற்றுக்கு உரிய அதிகாரிகளை நாடி தீர்வுகாணல் போன்ற பல்வேறு அபிவிருத்தி நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

இவ் மாதாந்தகூட்டத்திற்கு வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சின் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், சிறுவர் அபிவிருத்தி மற்றும் மேம்பாட்டு உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டு ஆலோசனை, வழிகாட்டல்களையும் மேற்கொண்டு வருகின்றனர்.





**5.4.புலம்பெயர் சங்கங்களின் நிருவாகிகளுக்கான கொள்தகுதிறன் பயிற்சிகளை வழங்கல்.**

புலம்பெயர் தொழிலாளர்களின் உரிமைகள் மற்றும் அவர்களின் தேவைகள், பிரச்சினைகளை புலம்பெயர் சங்கங்கள் கண்டறிந்து அவர்களுக்கான சேவைகளை வினைத்திறனான வகையில் வழங்க வேண்டும் என்னும் நோக்கில் கொள்தகுதிறன் பயிற்சியானது சங்கங்களின் நிருவாகிகளுக்கு சுவாட் அமைப்பின் ஸ்தாபகர் திரு.ச.செந்துராசா அவர்களினால் நடாத்தப்பட்டது. 3 கட்டமாக வழங்கப்பட்ட இப்பயிற்சியில் 30 சங்கங்களில் இருந்தும் 90 நிர்வாகிகள் கலந்துகொண்டனர்.





**5.5.புலம்பெயர் தொழிலாளர் சங்கங்களை சக்திப்படுத்துவதற்கான முன்னேற்பாட்டு நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.**

புலம்பெயர் தொழிலாளர் சங்கங்களை எதிர்வரும் 2020ம் ஆண்டில் சக்திப்படுத்தி வலுவூட்டுவதன் ஊடாக வினைத்திறனான சேவைகளை புலம்பெயர் தொழிலாளர்களுக்கு பெற்றுக் கொடுக்கும் நோக்கில் சங்கங்களின் தற்போதை நிலைமை தொடர்பாக ஆராய்ந்து தகவல்களைப் பெற்று அதன் அடிப்படையில் பரிந்துரை அறிக்கையினை நிதி நிறுவனத்திற்கு (SDC) வழங்கும் முகமாக திருமதி.மொனிக்கா Consultant அவர்கள் சுவட் நிறுவனத்திற்கு வருகை தந்து 2 நாட்கள் புலம்பெயர் தொழிலாளர் செயற்திட்டத்தில் இணைந்து பணியாற்றுகின்ற பணியாளர்கள், அரச உத்தியோகத்தர்கள், ஏனைய சிவில் அமைப்புக்களின் பிரதிநிதிகள், புலம்பெயர் தொழிலாளர் குடும்பங்கள் மற்றும் புலம்பெயர் சங்கங்களின் தலைவர்கள் , நிர்வாகிகளை சந்தித்து கலந்துரையாடி தகவல்கள் பெற்றுக்கொள்ளப்பட்டு சக்திப்படுத்தலுக்கான முன்னேற்பாட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.





**5.6. புலம்பெயர் தொழிலாளர் குடும்பங்களுக்கான சட்ட உதவிகளைப் பெற்றுக்கொடுத்தல்.**

கிராம, பிரதேச மட்டங்களில் புலம்பெயர் தொழிலாளர் குடும்பங்கள் எதிர்நோக்குகின்ற சட்ட பிரச்சினைகள், சவால்களுக்கான ஆலோசனை, வழிகாட்டல்களை மேற்கொண்டு தீர்வுகளைப் பெற்றுக் கொடுக்கும் நோக்கில் இத்திட்டப் பிரதேசங்களிலிருந்து சட்ட உதவியாளராக தெரிவு செய்யப்பட்ட அரச உத்தியோகத்தர்கள் மற்றும் சிவில் சமூக அமைப்பு உறுப்பினர்கள் 111 பேருக்கு இவ்வருடம் சட்ட உதவி தொடர்பிலான பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளதுடன், அவர்களுடாக புலம்பெயர் தொழிலாளர் குடும்பங்கள் எதிர்கொண்ட 42 முறைப்பாடுகள் இவ்வருடம் கிடைக்கப்பெற்று அவற்றில் 80 வீதமான முறைப்பாடுகளுக்கு இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் ஊடாக தீர்வுகள் பெற்றுக்கொடுக்கப்பட்டுள்ளன. இதில் 8 பேருக்கு 1,318,500.00 ரூபாய் நிதியானது இழப்பீட்டிற்கான நஸ்டஈடாக பெற்றுக்கொடுக்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் ஊடாக சென்ற வருடம் மத்தியஸ்தசபை உறுப்பினர்களுக்கு சட்ட ரீதியான பயிற்சியளிக்கப்பட்டு அவர்களின் சேவைகளை வினைத்திறனாக கொண்டுசெல்வதற்கான உதவிகளும் வழங்கப்பட்டதற்கமைவாக மத்தியஸ்தசபை ஊடாக புலம்பெயர் தொழிலாளர் குடும்பங்கள் தொடர்பான 72 பிணக்குகள் கையாளப்பட்டு அவற்றில் 44 முறைப்பாடுகளுக்கு தீர்வுகாணப்பட்டுள்ளது.





**5.7: சட்ட உதவியாளர்களுக்கான மாவட்டமட்ட கலந்துரையாடல்களை நடாத்தல்.**
**(Paralegal District conference meeting)**

பாதுகாப்பான புலம்பெயர் தொழிலாளர் செயற்திட்டத்தின் கீழ் கிராம மட்டத்தில் புலம்பெயர் தொழிலாளர் குடும்பங்கள் எதிர்நோக்கும் சட்டப்பிரச்சினைகளுக்கு சட்ட ஆலோசனை, வழிகாட்டல்களை மேற்கொள்வதற்காக பயிற்றுவிக்கப்பட்ட சட்ட உதவியாளர்களை (Government officers, mediation board members, CBOs, volunteers) மாவட்ட மட்டத்தில் ஒன்றிணைத்து மாநாடு ஒன்றினை நடாத்தி செயற்பாடுகளை முன்கொண்டு செல்வதிலுள்ள சாதாக பாதகங்களை ஆராய்ந்து அவற்றுக்கான இலகுபடுத்தல்களை மேற்கொண்டு வழங்கும் நோக்கிலும், 5 நாட்கள் தொடர் பயிற்சியினை முடித்துக்கொண்டவர்களுக்கான சான்றிதழ் வழங்கி அவர்களை இச்செயற்பாட்டில் தொடர்ந்தும் பங்களிப்புச்செய்ய ஊக்குவிக்கும் நோக்கிலும் இக்கலந்துரையாடலானது திட்டமிடப்பட்டு நிகழ்ச்சித்திட்ட முகாமையாளர் திரு.க.பிறேமலதன் அவர்களின் தலைமையில் 27.02.2018ம் திகதி சுவாட் தலைமையக் காரியாலயத்தில் நடைபெற்றது. இதில் 90 பேர் கலந்துகொண்டனர்.





**5.8: மனித ஆட்கடத்தல் தொடர்பிலான விழிப்புணர்வு வழங்கல்.**
**(Anti-human trafficking training)**

இலகுவில் பாதிப்படையக்கூடிய நிலையிலிருக்கின்ற குடும்பங்களை இலக்கு வைத்து வற்புறுத்தலின் பெயரில் வஞ்சகமாக கடத்தி வெளிநாடுகளுக்கு அனுப்பிவைக்கின்ற நிலையைக் குறைக்கும் முகமாக சுவாட் அமைப்பினால் செயற்படுத்தப்பட்டு வருகின்ற பாதுகாப்பான புலம்பெயர் தொழிலாளர் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் அம்பாறை மாவட்டத்திலுள்ள 17 பிரதேச செயலாளர் பிரிவுகளிலிருந்து தெரிவு செய்யப்பட்ட பொலீஸ் அதிகாரிகள் மற்றும் சட்ட உதவியாளர்களாக பயிற்றுவிக்கப்பட்ட வெளிநாட்டு அபிவிருத்தி உத்தியோகத்தர்களை ஒருங்கிணைத்து அவர்களுக்குத் தேவையான மனித ஆட்கடத்தல் தொடர்பான பயிற்சியானது இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் மனித ஆட்கடத்தல் தொடர்பான பிரிவின் முகாமையாளர் Mrs. A.D.I.S. Kahathuduwa அவர்களைக் கொண்டு சுவாட் அமைப்பின் நிகழ்ச்சித்திட்ட முகாமையாளர் திரு.க.பிரேமலதன் அவர்களின் தலைமையில் 10.01.2018ம் திகதி சுவாட் தலைமை அலுவலக பயிற்சிமண்டபத்தில் நடாத்தப்பட்டது. இதில் 52பேர் பங்குபற்றியிருந்தனர்.




**5.9: திட்டச் செயற்பாட்டில் இணைந்து செயலாற்றுகின்ற அரச அதிகாரிகளை ஊக்குவித்தல்.**
**(Motivation support to Government staff)**

சுவாட் அமைப்பினால் அம்பாறை மாவட்டத்திலுள்ள 10 பிரதேச செயலாளர் பிரிவுகள் பாதுகாப்பான புலம்பெயர் தொழிலாளர் செயற்திட்டமானது நடைமுறைப்படுத்தப்படுகின்றது. இச் செயற்திட்டத்தின் கீழ் பாதுகாப்பான முறையில் வெளிநாடு செல்வது தொடர்பான தகவல்களை வழங்குதல், பாதிக்கப்பட்டோருக்கான சட்ட உதவியளித்தல், உளவள உதவியளித்தல், நிதி முகாமைத்துவம் தொடர்பில் வழிகாட்டல், நிதி நிலையங்களுடன் தொடர்புபடுத்தல் போன்ற செயற்பாடுகள் செயற்படுத்தப்பட்டுவருகின்றன. இத்திட்டச் செயற்பாடுகளில் எம்முடன் இணைந்து கிராம மட்டத்தில் சேவையாற்றுகின்ற அரச அதிகாரிகளை ஊக்குவித்து அவர்களது சேவையினையும், ஒத்துளைப்புக்களையும் மேலும் அதிகளவில் மக்களுக்கு பெற்றுக்கொடுக்கும் வகையில் அவர்களுக்கான Motivation support நிகழ்வானது 17.02.2018ம் திகதி நடாத்தப்பட்டு 150 பேருக்கு 150,000.00 ரூபாய் செலவில் அவர்களுக்கான அலுவலகப் பை மற்றும் மக் போன்றன வழங்கப்பட்டன.




### 5.10: புலம்பெயர் தொழிலாளர் குடும்பங்களுக்கான சமூக உளநல உதவி வழங்கல். (Access to Psychosocial Support)

புலம்பெயர் தொழிலாளர் குடும்பங்கள் எதிர்நோக்குகின்ற சமூக உளநல பிரச்சினைகளுக்கு தீர்வு காணும் நோக்கில் பிரதேச செயலகங்களில் கிராம மட்டத்தில் மக்களுடன் இணைந்து சேவையாற்றும் 122 அரச அதிகாரிகளுக்கு (Women Development Officer, Probation officers, Counseling assistant, Child right promotion officers, National child protection assistant and DO – FE ) சமூக உளவள ஆற்றுப்படுத்தல் தொடர்பான இந்தியாவைச் சேர்ந்த டாக்டர்.திரு.ராஜாராம் சுப்பையா (Psychosocial consultant) அவர்களைக்கொண்டு 3நாட்கொண்ட பயிற்சியளிக்கப்பட்டதுடன், பயிற்றுவிக்கப்பட்ட இவ் உத்தியோகத்தர்களூடாக கிராமமட்டத்தில் புலம்பெயர் தொழிலாளர் குடும்பங்கள் எதிர்நோக்கிய 483 உளவளப் பிரச்சினைகள் அடையாளம் காணப்பட்டுள்ளன. இனங்காணப்பட்ட பிரச்சினைகளுக்கு பிரதேசரீதியாக சமூக உளவள மீளூட்டல் கலந்துரையாடல் நடாத்தப்பட்டு அவற்றுக்கு தீர்வு காணப்பட்டு வருகின்றன. அவ்வகையில் இவ்வருடம் கிடைக்கப்பெற்ற 483 முறைப்பாடுகளில் 401 முறைப்பாடுகள் தீர்வு காணப்பட்டுள்ளன.





### 5.11: புலம்பெயர் தொழிலாளர் பிள்ளைகளுக்கான கல்வி உபகரணங்கள் வழங்குதல்.

புலம்பெயர் தொழிலாளர் குடும்பங்களின் பிள்ளைகளின் கல்வி நடவடிக்கைகளை ஊக்குவிக்கும் முகமாக வறிய குடும்பத்திற்குட்பட்ட நிலையில் தெரிவுசெய்யப்பட்ட 94 புலம்பெயர் தொழிலாளர் பிள்ளைகளுக்கு 116,838.00 பெருமதியான கற்றல் உபகரணங்கள் இத்திட்டத்தின் ஊடாக வழங்கப்பட்டுள்ளது.





**5.12: பாதிக்கப்பட்டு மீளத்திரும்பிய புலம்பெயர் தொழிலாளருக்கான மருத்துவ உதவி வழங்கல்.**

நோயால் பாதிக்கப்பட்டு மீள நாட்டிற்கு திரும்பிய வறிய குடும்பத்தைச் சேர்ந்த புலம்பெயர் தொழிலாளர்கள் 8 பேருக்கு இத்திட்டத்தின் ஊடாக அவரின் மருத்துவ சிகிச்சையை மேற்கொள்வதற்கான போக்குவரத்துச் செலவுக்காக சிறு நிதி உதவித்தொகையாக 5,000.00 ரூபாய் வீதம் வழங்கப்பட்டுள்ளது.





**5.13: புலம்பெயர் தொழிலாளர் குடும்பங்களிலுள்ள சிறுவர், முதியோர்களை சமூகத்துடன் இணைத்து அவர்களுக்கு உகந்த சூழலை ஏற்படுத்திக்கொடுத்தல்.**

தொழில் நிமிர்த்தம் வெளிநாடு சென்றுள்ள குடும்பங்களிலுள்ள முதியவர்கள் மற்றும் சிறுவர்கள் பல்வேறு உளநலப் பிரச்சினைகளுக்கு முகங்கொடுத்து வருகின்றனர். இந்நிலையிலிருந்து இவர்களை பாதுகாத்து குடும்பத்திலும், சமூகத்திலும் நற்புறவான சூழலை ஏற்படுத்தி இவர்களது சமூக உளவளப் பிரச்சினைகளை குறைக்கும் முகமாக இத்திட்டச் செயற்பாட்டு பிரதேசங்களில் முதியோர், சிறுவர்களுக்காக பணியாற்றுகின்ற அரச உத்தியோகத்தர்கள் மற்றும் கிராமிய சிவில் அமைப்புக்களுக்குத் தேவையான பயிற்சிகளை வழங்கி அவர்களூடாக ஊடாக 30 சிறுவர்கழகங்களும், 30 முதியோர் சங்கங்களும் மறு சீரமைக்கப்பட்டுள்ளன. புலம்பெயர் தொழிலாளர் குடும்பங்களிலுள்ள 851 பிள்ளைகள் சிறுவர் கழகங்களிலும், 570 முதியோர்கள் முதியோர் சங்கங்களிலும் இணைத்துவிடப்பட்டுள்ளனர். மேலும் இச்சிறுவர்கழகங்களுக்கான விளையாட்டுப்பொருட்களும் அமைப்பினால் வழங்கப்பட்டுள்ளன. இச்சங்கங்களில் துறைசார்ந்த அரச உத்தியோகத்தர்கள் மற்றும் சிவில் அமைப்புக்களுக்கூடாக மாதாந்த கலந்துரையாடல்களும், சிறுவர்தின, முதியோர்தின நிகழ்வுகளும், உளவள மேம்பாட்டு நடவடிக்கைக்கான செயற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.





## 5.14: மீள நாடு திரும்புதவும், மீள் இணைதலும்.
## (Return and Reintegration)

**அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கு நிதி முகாமைத்துவம் தொடர்பான பயிற்சியளித்தல்.**

வெளிநாடுகளுக்கு செல்லவிருக்கின்ற மற்றும் மீள நாடு திரும்பியவர்களின் குடும்பங்கள் உழைக்கின்ற பணத்தை சரியான முறையில் முகாமைத்துவம் செய்வதற்கான திறனைப் பெற்றுக் கொடுக்கும் நோக்கில் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சின் அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கு 2 நாட்கள் கொண்ட பயிற்சி வழங்கப்பட்டது. இதில் அம்பாறை மாவட்டத்தில் உள்ள 10 பிரதேச செயலாளர் பிரிவுகளில் பணிபுரியும் 31 அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் பங்குபற்றினர்.





பயிற்றுவிக்கப்பட்ட அரச அதிகாரிகள், பணியாளர்கள், தொண்டர்கள் ஊடாக வெளிநாடுசெல்வதற்கான நோக்கத்தை அடைவது குறித்த பல்வேறு விழிப்புணர்வு நடவடிக்கைகள் கிராம மட்டத்தில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதனூடாக கீழ் குறிப்பிட்ட மாற்றங்களை அடைந்துள்ளனர்.

01. புலம்பெயர் தொழிலாளர் குடும்பங்களிலுள்ள 1694 பேருக்கு நிதிமுகாமைத்துவம் தொடர்பான பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளன. இதனூடாக 789 பேர்களின் சேமிப்பு மாதாந்த 1000 – 2000 ரூபாயாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

02. 581 ஆண், பெண் இளைஞர்களுக்கு தொழில் வழிகாட்டல் குறித்த பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளன.

03. 325 புலம்பெயர் தொழிலாளர் குடும்ப உறுப்பினர்கள் கூடுதலான வருமானம் ஈட்டும் தொழில் நடவடிக்கைகளில் ஈடுபட்டுவருகின்றனர்.

04. 180 மீள நாடுதிரும்பியவர்களுக்கு அவர்களது தொழில் தொடர்பான மதிப்பீடு செய்யப்பட்டு தொழில் சேவை வழங்குனர்களுடன் இணைத்துவிடப்பட்டுள்ளனர்.

05. மீள நாடுதிரும்பவுள்ள 28 பேருக்கு தொழில் வழிகாட்டல், அலோசனைகள் வழங்கப்பட்டுள்ளன.

06. பாதிக்கப்பட்டு மீள்திரும்பிய குடும்பங்களின் வாழ்வாதாரத்தை ஊக்குவிக்கும் முகமாக அவர்கள் சுயதொழில் ஒன்றினை மேற்கொள்வதற்கான நிதிவசதிகளை ஏற்படுத்திக் கொடுக்கும் நோக்கில் 780 பேருக்கு சமூர்த்தி வங்கி, சுவாட் நுண்கடன் திட்டம், ஏனைய அரச, தனியார் வங்கிகளுடன் தொடர்பேற்படுத்திக்கொடுக்கப்பட்டுள்ளது.

## 06.சமூக அபிவிருத்தி திட்டம்.

சமூகத்தில் ஒருவருக்கொருவர் உதவி செய்யும் ஒற்றுமை மனப்பான்மையை உருவாக்கி தங்களது குடும்ப முன்னேற்றத்திற்கும், கிராம ,சமூக, பொருளாதார முன்னேற்றத்திற்குமாக தன்னார்வத்துடன் சுயமாக செயற்படும் நோக்கில் இத்திட்டத்தின் கீழ் அமைப்பின் செயற்பாட்டுப் பிரதேசங்களான 6 பிரதேசங்களிலுமுள்ள 52 கிராமக் கிளைகளிலும் 10 – 15 பேர் கொண்ட 276 சுய சார்புக் குழுக்கள் அமைக்கப்பட்டு இக் குழுக்களின் ஊடாக ஒவ்வொரு கிராமங்களிலும் சமூக அபிவிருத்தி செயற்திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன

### 6.1: குழு, கிளை நிர்வாக, பிரதேச நிர்வாகக் கூட்டங்களை நடாத்தல்:

ஒவ்வொரு பிரதேச மட்டத்திலும் மாதாந்தம் குழுக்கூட்டம் (276 குழுக்களிலும்) , கிளைக்கூட்டம் (52 கிளை நிர்வாகத்திலும்) , பிரதேச நிர்வாகக்கூட்டம் (6 பிரதேச நிர்வாகத்திலும் ) நடாத்தப்பட்டு குழு, கிளை, பிரதேச ரீதியான செயல் முன்னேற்றங்கள், சவால்கள், பொதுத் தேவை, பிரச்சினைகள் குறித்து ஆராயப்பட்டு அவற்றுக்கான தீர்வுகளும், ஆலோசனை வழிகாட்டல்களும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இவ்வருடம் நடைபெற்ற இக்கலந்துரையாடல்கள் ஊடாக கீழ் குறிப்பிடப்பட்டுள்ள பொதுத் தேவை, பிரச்சினைகள் அடையாளம் காணப்பட்டு துறைசார் திணைக்கள அதிகாரிகளினூடாக தொடர்புகளைப் பெற்று அவற்றுக்கான தீர்வு காணப்பட்டுள்ளன.

| இல | கிராமம் | பிரச்சினைகள் / தேவைகள் | எடுக்கப்பட்ட நடவடிக்கை |
|---|---|---|---|
| 1 | வீரமுனை | வீரமுனையில் மின்சாரம் இல்லாத குடும்பங்கள் 5 அடையாளம் காணப்பட்டமை | இக்குடும்பங்கள் 5 ற்கும் சமுர்த்தி உத்தியோகத்தரை தொடர்பு கொண்டு அவர்களது விபரம் கொடுக்கப்பட்டு இக்குடும்பங்களுக்கு மண்ணெண்ணை முத்திரை பெற்றுக்கொடுக்கப்பட்டுள்ளது. |
| 2 | சொறிக்கல்முனை | சொறிக்கல்முனையில் யூசையப்பர் புரத்தில் பிரத்தியோக வகுப்பு நடத்துவதற்கு ஆசிரியர் மற்றும் வகுப்பறை இல்லாமை. | அங்கு உள்ள மக்களிடம் இவ்விடயம் தொடர்பில் சிறு நிதி அறவிடப்பட்டு பிரத்தியக வகுப்பறை ஒழுங்கு படுத்திய பின்னர் படித்த இளையோரைக் கொண்டு வகுப்பு நடாத்த ஒழுங்கு படுத்தல் மேற்கொள்ளப்பட்டுள்ளது. |
| 3 | சொறிக்கல்முனை | சொறிக்கல்முனையில் அன்னையர் புரத்தில் உள்ள 10 குடும்பங்களுக்கு மலகூடம், நீர், மின்சாரம் இல்லாமை | அடையாளம் காணப்பட்ட குடும்பங்களின் பெயர் விபரம் எடுக்கப்பட்டு பிரதேச செயலகத்தில் தகவல் கொடுக்கப்பட்டுள்ளன. |
| 4 | 15ம் கிராமம் | 3,4 வாய்க்கால் வீதியோரங்களில் வல்ப்புகள் பழுதடைந்து காணப்பட்டமை. | தவிசாளர் கலையரசன் ஊடாக கதைக்கப்பட்டு 02 வலுப்புகள் பிரதேச சபையினரால் போடப்பட்டமை. |
| 5 | சவளக்கடை | விக்னேஸ்வரா பாலர் பாடசாலைக்கு மாணவர்களை வெளியிடங்களுக்கு மேலதிக வகுப்புக்களுக்கு அனுப்புவது தொடர்பில் ஏற்படும் பிரச்சினை தொடர்பாக கருத்துக்கள் முன்வைக்கப்பட்டது. | பெற்றோர்.- மாணவர்கள் ஆசிரியர்கள் அனைவரும் ஒன்றிணைந்து VDO வின் தலைமையில் கூட்டம் நடாத்தப்பட்டு இவ் விடயம் தொடர்பாக மக்களுக்கு விழிப்புணர்வு வழங்கப்பட்டுள்ளன. |
| 6 | 4ம் கிராமம். | இளங்கோ பாலர் பாடசாலைக்கு உரிய நேரத்திற்கு மாணவர்களை அனுப்புவதில்லை. என பிரச்சனை முன்வைக்கப்பட்டது. | பெற்றோர்.- மாணவர்கள் ஆசிரியர்கள் அனைவரும் ஒன்றினைந்து கூட்டம் நடாத்தப்பட்டு இவ் விடயம் தொடர்பாக கருத்துக்கள் முன்வைக்கப்பட்டது. தற்போது நேரத்திற்கு மாணவர்கள் செல்வதை அவதானிக்கக்கூடியதாகவுள்ளது.. |
| 7 | வேப்பையடி | பிரதான வீதி குன்றும் குழியுமாக உள்ளது | தவிசாளருடன் தொடர்பு கொண்டு பேசியதற்கமைவாக வீதி புனரமைக்கப்பட்டுள்ளது. |
| 8 | 13ம்கிராமம் | வீதி வல்புகள் பழுதடைந்துள்ளமை | தவிசாளருடன் தொடர்பு கொண்டு பேசியமை |

| | | | |
|---|---|---|---|
| 9 | நாவிதன்வெளி | குழாய் நீர் வழங்கப்பட்டுள்ள போதும் 04 குடும்பங்களுக்கு இவை வழங்கப்படவில்லை | உரியவர்களை நீர்வழங்கல்வடிகாலமைப்பு சபையுடனும் பீரதேச சபையுடனும் தொடர்பு கொள்ளுமாறும் ஆலோசனை வழங்கப்பட்டுள்ளன. |
| 10 | 11--3 | மாலை நேர வகுப்பு நடாத்துவதற்காக மத்தியமுகாம் 06 இளைஞர்களால் மீன் சந்தை கட்டிடம் சிரமதானம் செய்யப்பட்டுள்ளது மாணவர்கள் அமர்வதற்கு நாற்காலிகள் இன்மை. | உலக தரிசனம் நிறுவன உத்தியோகஸ்த்தரிடம் கலந்துரையாடப்பட்டுள்ளது |
| 11 | 11--03 | மத்தியமுகாம் பிரதான வீதி உடைந்து காணப்படுகிறது | 120 பொது மக்களிடம் கையொப்பம் பெறப்பட்டு பிரதேச சபைக்கு கடிதம் வழங்குவதற்கப்பட்டுள்ளன. |
| 12 | 11ம் கிராமம் | விசேட தேவையுடைய 05 குடும்பங்கள் அடையாளம் காணப்பட்டது. | ஆலய நிர்வாக சபையுடன் கலந்துரையாடி அத்தியாவசிய பொருட்கள் பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளன. |
| 13 | தம்பிலுவில் 02 | 05 பேருக்கு டெங்குக் காய்ச்சல் | திருக்கோவில் சுகாதாரவைத்திய அதிகாரியினால் சுகாதாரப் பணிமனையில் 200 டெங்கு நுளம்பு பரிசோதிக்கும் அட்டை வழங்கப்பட்டு குழக்கூட்டத்தில் குழு உறுப்பினர்களிடம் வழங்கப்பட்டு 200 குடும்பத்துக்கு வழங்கப்பட்டுள்ளது |
| 14 | காயத்திரி கிராமம் | இக் கிராமத்திலுள்ள 07 அங்கத்தவர்களுக்கு அடையாள அட்டை புதுப்பிப்பதற்கான பிறப்பு பதிவு இல்லாமை. | பிரதேச செயலகம் சென்று பிறப்பு பதிவு எடுப்பதற்கான விண்ணப்பங்கள் எடுத்து உறிய அங்கத்தவர்களிடம் கொடுக்கப்பட்டுள்ளது. |
| 15 | விநாயகபுரம் 02 | இக் கிராமத்திலுள்ள மத்திய வீதி மிகவும் குண்டும் குழியுமாக உள்ளதால் இவ் வீதியில் அடிக்கடி விபத்துக்கள் நடைபெறுகின்றது. இதனால் பல பிரச்சனைகள் ஏற்படுகின்றன. | இவ் பிரிவு பிரதேச சபை உத்தியோகஸ்தருடன் கலந்துறையாடப்பட்டத்திற்கு அமைவாக இவ் வீதிகளுக்கு கிரவல் கொட்டப்பட்டுள்ளது. |
| 16 | 15 ஆம் கிராமம் | குடிநீர்ப்பிரச்சனை | தவிசாளாருடன் கலந்துரையாடப்பட்டு கடிதங்களும் வழங்கப்படடுள்ளது. விரைவில் இதற்கான நடிவடிக்கைகளை மேற்கொள்வதாக தவிசாளர் தெரிவித்துள்ளார் |
| 17 | 4 ஆம் கிராமம் | போதைப்பொருள் பாவனை அதிகரித்துள்ளது. | பொதுக்கூட்டத்தில் அங்கத்தவர் நிர்வாகிகளுடன் கலந்துரையாடப்பட்டு உண்மை நிலை தொடர்பாக எடுத்துரைக்கப்பட்டுள்ளது. பொதுமக்கள் அனைவரும் இதனை ஏற்றுக் கொண்டு இதனை குறைப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான விழிப்புணர்வு வழங்கப்பட்டுள்ளது. |
| 18 | 13ம்கிராமம் | கஜமுகா முன்பாடசாலைக்கு நீர் இல்லாமை | ஆசிரியாகளிடம் பிரதேச சபையுடன் தொடர்பு கொள்ளுமாறு ஆலோசனை வழங்கப்பட்டதற்கமைவாக நீர் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. |
| 19 | நாவிதன்வெளி | நாவிதன்வெளி பாடசாலை செல்லும் வீதி பழுதடைந்துள்ளமை. | நாவிதன்வெளி நிர்வாகிகளுக்கு ஊடாக பிதேசசபைக்கு கடிதம் வழங்கப்பட்டுள்ளது. |
| 20 | சொறிக்கல்முனை | சொறிக்கல்முனை கிளையில் மகளீர் சங்கம் இன்மை காரணமாக எங்களுடைய கிராமத்திலும் அதனை பெற்று வழங்குமாறு அங்கத்தவர்கள் கேட்டுக் கொண்டுள்ளனர். | மகளீர் அமைப்பு உத்தியோகஸ்தருடன் கலந்துரையாடி கிராம மக்கள் முன்னிலையில் கலந்துரையாடல் நடாத்தப்பட்டு மகளீர் சங்கம் அமைத்து வழங்கியமை. |
| 21 | சொறிக்கல்முனை | சொறிக்கல்முனை கிராமத்தில் மினி சூறாவளி தாக்கத்தினால் 03 அங்கத்தவர்களின் வீடுகள் சேதமடைந்துள்ளது. இதற்கான நிவாரண உதவிகளை மேற்கொள்ளுமாறு கேட்டுக் கொண்டுள்ளனர். | இது தொடர்பாக அங்கத்தவர்கள், நிர்வாகிகளினால் உதவிப்பொருட்கள் பெற்றுக்கொடுக்கப்பட்டுள்ளன. |

| | | | |
|---|---|---|---|
| 22 | பாண்டிருப்பு | பாண்டிருப்பு பெரியதம்பிரான் கோயில் வீதி சீரற்ற நிலையில்க் காணப்படுவது பிரச்சினையாக இனம் காணப்பட்டது. | இவ் விடயம் தொடர்பாக கிளை அங்கத்தவர்களுடன் இணைந்து கடிதம் எழுதி மாநகர சபை உறுப்பினர் திரு.பொன் செல்வநாயகம் அவர்களுக்கு வழங்கியதன் விளைவாக வீதி புனரமைப்பிற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. |
| 23 | கல்-02 | கல்-02 கிளையில் நிழல் மரங்களைப்பதியம் வைப்பதற்கான பைக்கற்றுகள் இல்லாமை பிரச்சினையாக இனம் காணப்பட்டது. | இவ் விடயம் தொடர்பாக forest department உத்தியோகத்தரைத் தொடர்பு கொண்டு பைக்கற்றுகள் பெறப்பட்டு கிளை அங்கத்தவர்களுக்கு 60 பைக்கற்றுகள் வழங்கப்பட்டன. |
| 24 | | பாண்டிருப்பு கிளையில் சமூர்த்தி உதவி இல்லாத 3 குடும்பத்தினரை இனம் கண்டமை. | இம் 3 குடும்பத்தினருக்கும் சமூர்த்தி உதவி பெறுவதற்கான கடிதம் எழுதி சமூர்த்தி முகாமையாளருடன் பேசி சமூர்த்தி வழங்குவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. |
| 25 | பாண்டிருப்பு | பாண்டிருப்பு கிளையில் கடன் சுமைக்கு ஆளான ஒரு பெண்ணிற்கு தொழில் வாய்ப்பு தேவை எனும் பிரச்சினையினை இனம் கண்டமை | இப் பெண்ணிற்கு ஒரு நிலையான மாதாந்த வருமானத்தினை ஏற்படுத்திக் கொடுக்கும் நோக்கத்தோடு பாண்டிருப்பு பிரதேசத்திலே உள்ள ஒரு சாப்பாட்டுக் கடையில் இடியப்பம் செய்வதற்கான தொழிலைப்பெற்றுக் கொடுத்து மாதாந்த சம்பளம் 15000/= உழைக்கக் கூடிய வாய்ப்பினை ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளது. |
| 26 | நற்-02 | பிற நிறுவனங்களின் தாக்கங்களினால் அநேகமான பெண்கள் கூடிய வட்டிக்கு கடன்களைப்பெற்று கடன் சுமைக்கு ஆளாகி வீடுகளில் இருக்க முடியாத அளவுக்கு தள்ளப்பட்டுள்ளமை பிரச்சினையாக இனம் காணப்பட்டது. | இவ் விடயம் தொடர்பாக கல்முனை பிரதேச செயலகத்தில்க் கடமையாற்றும் திருமதி.சோ.மனோராஜி அவர்களைக் கொண்டு கல்-02 கிளை அங்கத்தவர்களுக்கு விழிப்புணர்வு வழங்கப்பட்டது. |
| 27 | துரவந்தியமேடு | பாடசாலை வீதியில் தெரு மின்கம்பங்களுக்கு மின் குமிழ்கள் இல்லாமை பிரச்சினையாக இனம் காணப்பட்டது. | இவ் விடயம் தொடர்பாக ஊ.நு.டீ இற்கு கடிதம் வழங்கியதன் விளைவாக 10 தெரு மின் விழக்குகள் போடப்பட்டன. |
| 28 | கல்-02 | கல்முனை சவக்காலை பற்றைகள் நிறைந்து காணப்பட்டமை பிரச்சினையாக இனம் காணப்பட்டது. | இவ்விடயம் தொடர்பாக கல்முனை இளைஞர் கழகத்தினருக்கு கிளை நிர்வாகிகள் VDO இன் உதவியுடன் கடிதம் வழங்கியதனால் 25 இளைஞர்களினால் சவக்காலை துப்புரவு செய்யப்பட்டது. |
| 29 | 11--3 | மத்தியமுகாம் 06 மத்தியமுகாம் 05 அன்னமலை 03 ஆகிய இடங்களுக்கு மாலை நேரத்தில் இலங்கை போக்கு வரத்திற்கு சொந்தமான பஸ் வருவதில்லை | மத்தியமுகாம் 06 மத்தியமுகாம் 05 அன்னமலை 03 ஆகிய பொதுமக்களிடம் 243 கையொப்பம் பெறப்பட்டு கிராம சேவகரிடம் வழங்கப்பட்டுள்ளது. |
| 30 | வீரமுனை | வீரமுனையில் உள்ள 05 வறிய அங்க்த்தவர்களுக்கு வீடுகள் புனர் நிர்மானம் செய்யப்படாமல் இருந்தமை. | மாகான சபை உறுப்பினர் கோவிந்தசாமி அவர்களிடம் பெயர் விபரங்கள் எடுக்கப்பட்டு அவர்களுக்கான புனர் நிர்மானத்துக்கு பணம் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது |
| 31 | வீரமுனை | வீரமுனைப்பிரதேசத்தில் வீரமுனை 4 லில் உள்ள வறிய அங்கத்வர்களுக்கு மலசல கூட வசதி இல்லாமை | மாகாண சபை உறுப்பினர் கோவிந்த சாமி அவர்களிடம் விபரங்கள் எடுக்கப்பட்டு வழங்கப்பட்டுள்ளது |
| 32 | மட்த்தரவை | மட்த்தரவையில் உள்ள 02 அங்கத்தவர்களுக்கு சுய தொழில் செய்வதற்கான வாழ்வாதார உதவி கோரியமை | அடையாளம் கானப்பட்டஅங்கத்தவர்களுக்கு வாழ்வாதாரம் வழங்க பொருளாதார உத்தியோகத்தரிடம் பெயர் விபரம் வழங்கப்பட்டுள்ளது |
| 33 | மல்வத்தை - 01 | கணவரால் கைவிடப்பட்ட ஒரு குடும்பத்தில் உள்ள 7ம் தரத்தில் கல்வி கற்க வேண்டிய பிள்ளை ஒன்று பாடசாலைக்குப் போவதில்லை என அடையாளம் காணப்பட்டது. | பாடசாலை அதிபருடன் கலந்தரையாடி மீள பாடசாலையில் இணைத்துவிடப்பட்டுள்ளார். |

| | | | |
|---|---|---|---|
| 34 | 4ம் கிராமம். | குப்பைகள் மற்றும் கழிவுப்பொருட்களை சேகரித்து வைத்தும் பிரதேசசபையினுடாக அதனை உரியமுறையில் அகற்றாமையினால் இக்கிராம மக்கள் பாதிக்கப்படுகின்றார்கள் | நிருவாகிகள் சேர்ந்து பிரதேசசபைக்கு கடிதம் ஒன்றினை எழுதி அறிவித்தல் வழங்குவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படல் வேண்டும் என அறிவிக்கப்பட்டது. |
| 35 | சவளக்கடை | பசுபால் உற்பத்தி அதிகமாக உள்ள காரணத்தினால் அதனை விற்பனை செய்வதில் பெரும் கஸ்ரத்தினை அம்மக்கள் எதிர்நோக்கியுள்ளனர். | பாலை சேகரித்து பால் பண்ணைக்கு மொத்தமாக கொடுத்தல் வேண்டும் எனவும். (பாலை சேகரித்து ஒருவர் அதனை கொண்டு வியாபாரியிடம் கொடுத்து தனக்கு வருமானத்துக்காக ஒரு சிறு தொகை பணத்தினை பெற்றுக்கொள்ளல்.) அதற்கான ஏற்பாடுகளை நிருவாகிகள் முன்னின்று செய்தல் வேண்டும்என கூறப்பட்டது |
| 36 | 15ம் கிராமம். | தற்போது நிலவும் வரட்ச்சி காரணமாக தண்ணீர் தட்டுப்பாடு நிலவுகின்றமையினால் பிரதேச சபையினூடாக 15 நர்ட்களுக்கு 1தடவை தண்ணீர் வழங்கப்படுகின்றது. இதனை 7 நாட்களுக்கு 1தடவை தண்ணீர் வழங்கும் படி நிர்வாகிகளினால் கருத்து முன் வைக்கப்பட்டது. | இது தொடர்பாக பிரதேசசபையுடன் தொடர்பு கொண்டு கதைத்தல் வேண்டும் எனவும் பேசப்பட்டது. |
| 37 | வேப்பையடி | மரக்கறி சங்கத்திற்கு வழங்கப்பட்ட காணிக்குள் வேறு கிராமத்தவர்களை குடியேற்றுதல் | சங்கத்தினூடாக பிரதேச செயலாளருக்கு முறைப்பாடு செய்யப்பட்டு அவற்றுக்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளத. |
| 38 | 13ம்கிராமம் | பொதுக்கிணறு உள்ள காணிக்காரர் கிணற்றிற்கு வேலி போட்டது | உரியவர்களுடன் கலந்துரையாடி பிரச்சனையைத் தீர்த்து வைக்கப்பட்டுள்ளது. |
| 39 | நாவிதன்வெளி | சவக்காலைக்குள் குப்பைகள், போத்தல்களை போடுதல். | மகளிர் அபிவிருத்திச் சங்கத்தினுாடாக பிரதேசசபைக்கு கடிதம் வழங்கப்பட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. |
| 40 | 11--3 | அங்கத்தவர்களுக்கு சோளம் உற்பத்தி செய்வதற்கான சோளம் விதை இன்மை | விவசாய திணைக்களத்துடன் கலந்துரையாடி 10 கிலோ சோளம் விதை 05 அங்கத்தவர்களுக்கு பெற்றுகொடுக்கப்பட்டுள்ளது. |
| 41 | 11கிராமம் | தரம் 09 கல்வி கற்கும் மாணவிக்கு பெற்றோரால் திருமணம் நிச்சயிக்கப்பட இருந்தது | கிராம சேவகர் அவர்களுக்கு தகவல் வழங்கப்பட்டு நிச்சயிக்கப்பட இருந்த திருமணம் சுகாதார வைத்திய அதிகாரிகளாலும் பிரதேச செயலக உத்தியேகஸ்தர்களாலும் நிறுத்தப்பட்டுள்ளது. |
| 42 | நீலாவணை | வயல்க்காணிகளினுள் குப்பைகள் கொண்டு கொட்டப்படுவதனால் விவசாயச் செய்கை பாதிக்கப்படுவது பிரச்சினையாக இனம் காணப்பட்டது. | இவ்விடயம் தொடர்பாக கிளை நிர்வாககிகள் மக்கள் இ இளைஞர்கள் இணைந்து கடிதம் எழுதி கையொப்பமிட்டு மாநகர சபைக்கு வழங்கியமையினால் தற்பொழுது குப்பை ஏற்றும் வாகனம் அனுப்பப்படுகிறது. |
| 43 | கல்-02 | முருகன் கோயில் வீதியில் தெரு மின் விளக்குகள் இல்லாமை பிரச்சினையாக இனம் காணப்பட்டது. | இவ்விடயம் தொடர்பாக C.E.B. இற்கு அங்கத்தவர்களும் VDO உம் இணைந்து அறிவித்தல் வழங்கியதன் விளைவாக 10 மின் குமிழ்கள் போடப்பட்டது. |
| 44 | காரைதீவு 8,9 பிரிவு | 8ம்,9ம், பிரிவுகளில் மிகவும் வறுமைக்கு உட்டபட்ட குடும்பத்தில் உள்ள பிள்ளைகள் நால்வர் பாடசாலை உபகரணம் இல்லாமல் பாடசாலைக்கு செல்லாமல் இருந்தனர். | அவ்வாறு இனம்காணப்பட்ட பிள்ளைகள்பற்றி sdc யின் கள உத்தியோகத்தர் ஆனந்தராஜாவிடம் தகவல் கொடுக்கப்பட்டு DOFE புஸ்பராஜாவிடமும் கொடுக்கப்பட்டு அவர்கள் மீண்டும் பாடசாலை அனுப்புவதற்காக பாடசாலை உபகரணம் DS முன்னிலையில் வழங்கிவைக்கப்பட்டது. |
| 45 | வினாயகபுரம் மண்டானை திருக்கோவில் | நிலக்கடலைசந்தைவாய்ப்பு இல்லை | வினாயகபுரம் 04 பிரிவீல் உள்ள 06 அங்கத்தவர்களின் தோட்டத்தில் செய்கை பண்ணப்பட்ட நிலக்கடலையைப் பார்வையிட்டு அதனைக் கொள்வனவு செய்து விற்கப்பட்டது (4670கிலோ) |

| | | | |
|---|---|---|---|
| 46 | திருக்கோவில் 01 | சமுர்த்தி முத்திரை இல்லை | திருக்கோவில் 01 கிராமத்தில் சமுர்த்தி முத்திரை இல்லாத நபர்கள் 17 பேரை இனங்கண்டு சமுர்த்தி முத்திரை பெறுவதற்கான விண்பப்படிவம் வாங்கி நிரப்பி சமுர்த்தி உத்தியோகத்தரிடம் கொடுக்கப்பட்டுள்ளது |
| 47 | திருக்கோவில் 01<br>திருக்கோவில் 02<br>விநாயகபுரம் 04 | வீதிகள் இருட்டடைந்து காணப்பட்டமை | இராமசாமி வீதி கடற்கரைவீதி மாணிக்கப்பிள்ளையார் வீதி யில் இருட்டடைந்து காணப்பட்டமையால் பிரதேச செயலகத்தில் தீர்த்தத்தை முன்னிட்டு நடைபெற்றகூட்டத்தில் மின்குமிழ் போடுவதற்கு அடையாளங் காணப்பட்டவீதிகளின் பெயர்களைக் கூறி மின்குமிழ் போடவேண்டும் எனக் கேட்டுக் கொண்டதற்கமைவாக 9 மின்குழிழ்கள் மூன்று வீதிகளிலும் போடப்பட்டுள்ளது |
| 48 | விநாயகபுரம் 03 | கணவரால் கைவிடப்பட்ட ஒரு தாயும் 05வயது பெண் பிள்ளையும் சாப்பாட்டிற்கு வழி இல்லாமல் மிகவும் கஸ்ரப்பட்டிருந்ததை கள வியயத்தின் போது கண்டறியப்பட்டது | பிரதேச செயலகத்தில் உள்ள சுய தொழில் அபிவிருத்தி உத்தியோகஸ்தரிடம் உறிய பெண்ணை அழைத்து சென்று உதவித்திட்டத்திற்கான கடிதம் கொடுக்கப்பட்டுள்ளது |
| 49 | காயத்திரி கிராமம் 01 | காயத்திரி கிராமம் 01ம் வீதியிலுள்ள மக்கள் இவ் வீதிக்கான மின் விளக்கு தேவை என பிரதேச சபை உத்தியோகஸ்தரிடம் சென்ற வாரம் கடிதம் கொடுத்துள்ளனர் | 2018.07.27ம் திகதி இவ் வீதிகளுக்கு 03 மின் வளக்கு போடப்பட்டுள்ளது |
| 50 | உல்லை | வீதி மின் குமிழ்கள் இல்லாமல. காணப்பட்டமை | மக்களிடம் கையெப்பம் வாங்கப்பட்டு பிரதேசசபையிடம் கையளிக்கம்பட்டு மின்விளக்கு பொடப்பட்டுள்ளது. |
| 51 | உல்லை | பாடசாலைக்கு அண்மையில் உள்ள மதுபானம் உற்பத்தி செய்வது இனம் காணப்பட்டது. | மக்களிடம் கையெப்பம் வாங்கபபட்டு கிராம உத்தியேகத்தர் ஊடாக பொலீசாரிடம் ஒப்படைக்கப்பட்டது.. |
| 52 | உல்லை | பாடசாலைக்கு அண்மையில் உள்ள நீர் தேக்கம் வலாகம் அசுத்தமாக காணப்பட்டமை | PHA .யிடம் அறிவிக்கப்பட்டது. |
| 53 | ஏத்தம் | ஏத்தம் கிளையில் வள்ளுவர் வீதியில் மின்விளக்கு இல்லாமை | பிரதேச சபை உறுப்பினரிடம் இது தொடர்பாக கடிதம் கொடுக்கப்பட்டது. 2 மின் விளக்குகள் போடப்பட்டுள்ளன. |
| 54 | வேப்பையடி | வேப்பையடி வைத்தியசாலை வளவிற்குள் பற்றைக் காடுகள் உள்ளமை | அபிவிருத்திக் குழவுடன் தொடர்புகொண்டு இதுசம்மந்தமாகக் கலந்துரையாடியமை. சமூர்த்தி உத்தியோகத்தர் ஊடாக துப்பரவு செய்யப்பட்டது |
| 55 | 13ம்கிராமம் | முன்பாடசாலை ஆசிரியருக்கும் பெற்றார்க்கும் இடையிலான விளையாட்டுப் போட்டி சம்மந்தமான கருத்து முரண்பாடு | இது சம்மந்தமாக ஆசிரியருடனும் பெற்றாருடனும் கலந்துரையாடி இருவருக்கும் தெளிவுபடுத்தியமை |
| 56 | வீரமுனை | வீரமுனைப்பிரதேசத்தில் 12ம் பிரிவில் உள்ள அங்கத்தவர் இராமலிங்கம் பவானி என்பவரது வீட்டின் கூரைகள் காற்று மழை என்பவற்றின் காரணமாக உடைந்து வழ்ந்துள்ளது. | அடையாளம் கானப்பட்ட அங்கத்தவர்க்கு வீரமுனைப் பிரதேச கிராம உததியோகத்தரிடம் கடிதம் வழங்கப்பட்டது |
| 57 | வீரமுனை | வீரமுனைப்பிரதேசத்தில் 12ம் பிரிவில் உள்ள வறிய குடும்பத்தைச் சேர்ந்த ஆடு வளர்ப்பினைத் தொழிலாக மேற்கொண்டு வரும் சரஸ்வதி எனும் அங்கத்தவர்க்கு ஆட்டுக் கொட்டில் உதவி கோரியமை | அடையாளம் காணப்பட்ட அங்கத்தவர்க்கு வீரமுனைப் பிரதேச கிராம உததியோகத்தரிடம் கடிதம் வழங்கப்பட்டது |
| 58 | வளத்தாப்பிட்டி | வளத்தாப்பிட்டி கிளையில் உள்ள யு.சந்தனப்பிள்ளை மற்றும் மு.லலிதா என்னும் அங்கத்தவர்களின் வீட்டை காட்டு யானை உடைத்து சேதம் ஆக்கியது ( மா அரைக்கும் இயந்திரம் , மிளகாய் அரைக்கும் இயந்திரம் , உலர உணவு பொருட்கள் ,வீடு,மதில் ) | பிரதேச காரியாலயம் மற்றும் வணவிலங்கு அதிகார சபைக்கு அறிவிக்கப்பட்டு ஆவணம் மற்றும் போட்டோ வழங்கப்பட்டுள்ளது இதற்கு கொழும்பு இருந்து தெற்கான பணம் வரும் எனக் கூறப்பட்டுள்ளது. |

| | | | |
|---|---|---|---|
| 59 | வளத்தாப்பிட்டி | வளத்தாப்பிட்டி கிளையில் 3 பெண் பிள்ளைகள் உள்ளது மற்றும் கணவரால் வயது சென்ற காரணத்தினால் உழைக்க முடியாத நிலை இவ்வாறு கஸ்ரப்பட்ட குடும்பத்தை அடையாளம் கண்டது. | பணியாளர் விவசாயத் திணைக்கழகத்தில் உள்ள செயற்பாடுகளை அறிந்து அவர்களோடு தொடர்பு கொண்டு அக்குடும்பத்திற்கு சுயதொழிலை ஊக்குவிக்கும் முகமாகவும் குடும்ப வருமானத்தை உயர்த்தும் பொருட்டும் மரக்கறி வகைகளை போட்டு விற்பனை செய்யக்கூடிய சிறிய கட்டிடம் அமைத்து வழங்குவதற்கு வழி வகுத்துக் கொடுத்தது. |
| 60 | நற்-01 | வேப்பையடி வீதியில் மின் கம்பங்களுக்கு மின் குமிழ்கள் இல்லாமை பிரச்சினையாக இனம் காணப்பட்டது. | இவ்விடயம் தொடர்பாக C.E.B இற்கு கடிதம் வழங்கியதன் விளைவாக மின்கம்பங்களுக்கு 10 மின் குமிழ்கள் போடப்பட்டன. |
| 61 | சேனைக்குடியிருப்பு | பலாவடி வீதியில் குப்பைகள் கொட்டப்பட்டு துப்புரவின்றிக் காணப்பட்டமை பிரச்சினையாக இனம் காணப்பட்டது. | இவ் விடயம் தொடர்பாக அங்கத்தவர்களும் அங்கத்தவர் அல்லாதவர்களும் இணைந்து மாநகர சபைக்கு கடிதம் வழங்கியதன் விளைவாக தற்பொழுது வாரத்தில் 2 நாட்கள் குப்பை ஏற்று வாகனம் அனுப்பப்படுகிறது. |
| 62 | துரவந்தியமேடு | பிள்ளையார் கோயில் வீதியில் மின் கம்பங்களுக்கு மின் குமிழ்கள் இல்லாமை பிரச்சினையாக இனம் காணப்பட்டது. | இவ்விடயம் தொடர்பாக C.E.B இற்கு கடிதம் வழங்கியதன் விளைவாக மின்கம்பங்களுக்கு 8 மின் குமிழ்கள் போடப்பட்டன. |
| 63 | கல்-01 | கல்-01 குருந்தையடி வீதியில் குப்பைகள் கொட்டப்படுவது பிரச்சினையாக இனம்காணப்பட்டது. | இவ்விடயம் தொடர்பாக கிளை நிர்வாகிகள் மக்கள் இ இளைஞர்கள் இணைந்து கடிதம் எழுதி கையொப்பமிட்டு மாநகர சபைக்கு வழஙகியமையினால் தற்பொழுது குப்பை ஏற்றும் வாகனம் அனுப்பப்படுகிறது. |
| 64 | பாண்டிருப்பு | வைத்தியர் வீதியில் மின் கம்பங்களுக்கு மின் குமிழ்கள் இல்லாமை பிரச்சினையாக இனம் காணப்பட்டது. | இவ் விடயம் தொடர்பாக C.E.B இற்கு கடிதம் வழங்கியதன் விளைவாக 8 மின் குமிழ்கள் போடப்பட்டன. |
| 65 | பெரியநீலாவணை | நாராயணன்விதியில் மின் கம்பங்களுக்கு மின் குமிழ்கள் இல்லாமை பிரச்சினையாக இனம் காணப்பட்டது. | இவ் விடயம் தொடர்பாக C.E.B இற்கு கடிதம் வழங்கியதன் விளைவாக 10 மின் குமிழ்கள் போடப்பட்டன. |

**6.2: துறைசார் நிபுணத்துவர்களைக் கொண்டு விழிப்புணர்வு நடவடிக்கைகளும் மேற்கொள்ளல்.**

கிராம மட்டத்தில் நடைபெற்று வருகின்ற கிளைநிர்வாக, பிரதேச நிர்வாகக்கூட்டங்களில் துரைசார் நிபுணர்களை அழைத்து அவர்களினால் வழங்கப்படும் சேவைகள் குறித்தும், அவற்றை பெற்றுக்கொள்வதற்கான நடைமுறைகள் குறித்தும் விப்புணர்வு கருத்தரங்குகள் மேற்கொள்ளப்பட்ட வருகின்றன. இதனூடாக கிராம மட்டங்களில் அடையாளம் காணப்படுகின்ற பிரச்சினைகளுக்கு இலகுவில் துறைசார் உத்தியோகத்தர்களை அணுகி தீர்வுகாண்பதற்கும், அவர்களுடன் சிறந்த தொடர்பை ஏற்படுத்திகொள்ளக்கூடியதாகவும் உள்ளது. இதனடிப்படையில் இவ்வருடம் 147 விழிப்புணர்வு கருந்தரங்குகள் நடாத்தப்பட்டுள்ளதுடன் இதில் 7624 பேர் கலந்துகொண்டு விழிப்புணர்வை பெற்றுள்ளனர்.

- பெண்களுக்கு எதிரான பிரச்சினைகள், வீட்டு வன்முறை, பால்நிலை சமத்துவம், பிள்ளை வளர்ப்பு தொடர்பாக பெண்கள் அபிவிருத்தி உத்தியோகத்தர் M.ஜெஸிலா மற்றும் நிவாரண சகோதரி A.G.S. அனிஷா ஆகியோரைக்கொண்டு 23.04.2018ம் திகதி சம்மாந்துறை பிரதேச மட்தரவை கிளை அங்கத்தவர்களுக்கு விழிப்புணர்வு வழஙகப்பட்டுள்ளது.






- கல்வியின் முக்கியத்துவம், மாணவர் இடைவிலகல், பிரதேச செயலகத்தினால் கிடைக்கப்பெறும் விசேடதேவைக்குட்பட்டவர்களுக்கான உதவித்திட்டங்கள், வாழ்வாதார உதவித்திட்டம் மற்றும் பொதைப்பொருள் பாவனையால் ஏற்படும் பிரச்சினைகள் குறித்து சம்மாந்துறை பிரதேச செயலக உளவள துணையாளர் திரு.A.சுதர்சன் அவர்களை பிரமுகராகக்கொண்டு 25.04.2018ம் திகதி விழிப்புணர்வு கருத்தரங்கு நடாத்தப்பட்டுள்ளது.




- அனர்த்தமுகாமைத்துவ அபிவிருத்தி உத்தியோகத்தர் திரு.A.M.பிரோஸ் அவர்களை பிரமுகராக்கொண்டு அனர்த்த முகாமைத்துவம் தொடர்பாகவும், அனர்த்தம் ஏற்படும் பட்சத்தில் பிரதேச செயலகத்தினால் கிடைக்கப்பெறும் நிவாரணங்கள் குறித்தும், சாதாரண வீடுகளில் முகாமைத்துவரீதியில் உடைமைகளை எவ்வாறு பாதுகாக்க வேண்டும் என்பது குறித்தும், வரட்சி முகாமைத்துவம் தொடர்பாகவும், தற்போது நிலவும் வரட்சியான காலநிலையில் நீரின் முக்கியத்துவம் தொடர்பாகவும் 03.05.2018ம் திகதி சம்மாந்துறை பிரதேச செயலகத்தில் வழிப்புணர்வு கருத்தரங்கு நடாத்தப்பட்டது




- சிறுவர் உரிமைகள் சிறுவர் உரிமைகள், சிறுவர் உரிமை சமவாயம், சிறுவர் துஷ்பிரயோகம், பாலியல் துஷ்பிரயோகம், தொடர்பாகவம் சிறுவர் உரிமை தொடர்பான திணைக்களங்கள் குறித்தும், நாவிதன்வெளிப் பிரதேச செயலக சிறுவர் நன்நடத்தை உத்தியோகத்தர் Mrs.R.கலா அவர்களைக்கொண்டு இப்பிரதேச மக்களுக்கான விழிப்புணர்வு கருத்தரங்கானது 26.04.2018ம் திகதி நடாத்தப்பட்டது.




- தொழில் பயிற்சி மற்றும் தொழில் வழிகாட்டல் தொடர்பாக திறன் அபிவிருத்தி உத்தியோகத்தர் திரு.எஸ்.எம் பஸ்ஸீன் அவர்களைக்கொண்டு கல்முனை நற்பிட்டிமுனை கிளை அங்கத்தவர்கள் 70 பேருக்கு 19.02.2018ம் திகதி விழிப்புணர்வு நடாத்தப்பட்டுள்ளது.




.

- அரசேவைகள் குறித்தும் அவற்றை பெற்றுக்கொள்ளும் வழிமுறைகள் தொடர்பாகவும், அரச சார் நிறுவனங்களை தொடர்ப்பு படுத்தும் முறைமைகள் குறித்தும், உளநெருக்கு ஏற்படாமல் தவிர்த்துக்கொள்ளும் வழிமுறைகள் குறித்தும், பெண்கள் வலுவூட்டல் தொடர்பாகவும் சம்மாந்துறை பிரதேச செயலக உளவள துணையாளர் திரு.A.சுதர்சன் அவர்களை பிரமுகராகக்கொண்டு 30.01.2018ம் திகதி விழிப்புணர்வு கருத்தரங்கு நடாத்தப்பட்டுள்ளது.




- கல்வியின் முக்கியத்துவம் குறித்து ஆசிரியர் திருமதி T.சங்கீதா அவர்களைக்கொண்டு காரைதீவு பிரதேசத்தில் 06.02.2018ம் திகதி விழிப்புணர்வு கருத்தரங்கு ஒன்று நடாத்தப்பட்டுள்ளது.

- பொது சுகாதார உடல் நல மேம்பாடு குறித்து தெரிவு செய்யப்பட்ட கிராம மக்கள், சிறுவர்கள், பொது சுகாதார தொண்டர் குழுக்கள் மற்றும் கிராமத்தலைவர்கள் உள்ளிணைத்து திருக்கோவில் பிரதேசத்தில் விழிப்புணர்வு கருத்தரங்கு நடாத்தப்பட்டுள்ளது.

- சிறுவர் சேமிப்பு தொடர்பாக வங்கி உதவி முகாமையாளர் திரு. சதீஸ்குமார் அவர்களைக் கொண்டு நாவிதன்வெளிப் பிரதேசத்தில் 27.02.2018ம் திகதி விழிப்புணர்வு கரத்தரங்கு ஒன்று நடாத்தப்பட்டள்ளது.

- கற்ப பை புற்றுநோய் தொடர்பாகவு, கற்பத்தடை மாத்திரை பாவிப்பதனால் ஏற்படும் தீமைகள் குறித்தும், மார்பு புற்று நோய், இரத்த அழுத்தம் போன்ற நோய்கள் தொடர்பாகவும் குடும்ப நல உத்தியோகத்தர் திருமதி. ஜீவிதா அவர்களைக் கொண்டு விழிப்புணர்வு வழங்கப்பட்டுள்ளது.




- கிராமிய மட்டத்தில் மது பாவனையின் அளவைக் குறைத்து அவற்றை இல்லாமற் செய்யும் நோக்கில் போதைப்பொருள் பாவிப்பதனால் ஏற்படும் தீங்குகள் குறித்து 6 பிரதேசங்களிலும் விழிப்புணர்வுக் கருத்தரங்குகள் நடாத்தப்பட்டுள்ளன.

- புற்றுநோய் தொடர்பாக திருக்கோவில் மேற்பார்வை பொது சுகாதார பரிசோதகர் திரு.க. லோகிதகுமார் அவர்களைக்கொண்டு திருக்கோவில் பிரதேச நிர்வாகிகள் 63 பேருக்கு 21.02.2018ம் திகதி விழிப்புணர்வு வழங்கப்பட்டுள்ளது.




- சிறிலங்கா இன்சூரன்ஸ் கெம்பனியுடாக தொழிலுக்கான காப்புறுதி தொடர்பாகவும், இதனால் ஏற்படும் நன்மைகள்கள் குறித்தும், காப்புறுதி செய்துகொள்ளும் முறைமைகள் குறித்தும் 6 பிரதேசங்களிலும் விழிப்புணர்வு கருத்தரங்குகள் நடாத்தப்பட்டுள்ளன.

- கிராமங்களிலிருந்து தெரிவு செய்யப்பட்ட பொது சுகாதார தொண்டர் குழு உறுப்பினர்களைக் கொண்டு MOH ஊடாக திருக்கோவில் பிரதேசத்தில் டெங்கு ஒழிப்பு தொடர்பாக விழிப்புணர்வும், சிரமதானமும் செய்யப்பட்டுள்ளது.

- பொருளாதார அபிவிருத்தி தொடர்பாகவும், இதன் கீழ் பிரதேச செயலகத்தினால் வழங்கப்படும் உதவித்திட்டங்கள் குறித்தும் பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர் திரு.விஜயராஸ் அவர்களைக் கொண்டு சவளக்கடை கிராமத்தில் 02.02.2018ம் திகதி விழிப்புணர்வு கருத்தரங்கு நடாத்தப்பட்டுள்ளது.

- இளையோர் திறன் மேம்பாடு தொடர்பாக அமைப்பின் செயற்பாட்டுப் பிரதேசங்களான பொத்துவில், திருக்கோவில், கல்முனை, காரைதீவு, சம்மாந்துறை, நாவிதன்வெளி ஆகிய பிரதேசங்களிலிருந்து தெரிவு செய்யப்பட்ட இளையோர்களை உள்ளிணைத்து இணைப்பாளர் திரு.ச.செந்துராசா அவர்களினால் 02.06.2018ம் திகதி விழிப்புணர்வுப் பயிற்சி நடாத்தப்பட்டுள்ளது.





- தெங்குப் பயிர்ச்செய்கைக்கு அதிகம் அழிவை ஏற்படுத்தும் மயிட்ட (ஊழஉழரெவ ஆவைந) நோயினை கட்டுப்படுத்தும் முகமாக தென்னை அபிவிருத்தி உத்தியோகத்தரைக்கொண்டு விழிப்புணர்வு கருத்தரங்கு நடாத்தப்பட்டுள்ளதுடன் மானிய அடிப்படையில் மயிட்டா ஒழிப்பு பக்கற்றுக்கள் இலவசமாக பெற்றுக்கொடுக்கப்பட்டது.





**6.3: சுயசார்பு குழுக்கள் ஊடாக குழுச்செயற்பாடுகளை மேற்கொள்ளல்.**

ஒருவருக்கொருவர் உதவி செய்யும் ஒற்றுமை மனப்பான்மையை உருவாக்கி தங்களது குடும்ப முன்னேற்றத்திற்கும், கிராம ,சமூக, பொருளாதார முன்னேற்றத்திற்குமாக தன்னார்வத்துடன் சுயமாக செயற்படும் நோக்கில் இக் குழுச் செயற்பாடுகள் கிராம மட்டத்தில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

குழுச் செயற்பாடுகளாக வருமானம் தரும் உள்ளூர் உற்பத்திகளை குழுவாக இணைந்து மேற்கொள்ளல், பாடசாலை, ஆலயங்களில் சிரமதான நடவடிக்கைகளை மேற்கொள்ளல். பயிர் விதைகள், பழமரக் கன்றுகளை வழங்குதல், வறிய மாணவர்களுக்கு உதவுதல், இயலாமைக்குட்பட்டவர்களுக்கு உதவுதல், வைத்தியசாலைகளுக்கு வில்லை பை தயாரித்து வழங்குதல், பாலர் பாடசாலை மாணவர்களுக்கு சத்துணவு தயாரித்து வழங்கல், பலமரக் கன்றுகளை நடல், குழு, கிராம ரீதியான தேவை பிரச்சினைகளை அடையாளம் கண்டு அவற்றுக்கு தீர்வு காணும் நடவடிக்கைகளில் ஈடுபடல், அங்கத்தவர்களின் கிணறுகளுக்கு குளோரின் இடல் போன்ற சமூக அபிவிருத்தி செயற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றனர்.

குழுச்செயற்பாட்டு புகைப்படங்கள்.


















7. **திறன் மேம்பாட்டுத் திட்டம் :-**

- சுவாட் அமைப்பினால் செயற்படுத்தப்பட்டு வருகின்ற செயற்பாடுகளை மேலும் வினைத்திறனான முன்னெடுத்துச் செல்லும் நோக்கில் பணியாளர்களுக்கான கொள்திறன் மேம்பாட்டுப் பயிற்சியானது தேசிய சமூக அபிவிருத்தி நிறுவன (NISD) விரிவுரையாளர் Mr.Nimsath அவர்களைக்கொண்டு 22,24.01.2018ம் திகதிகளில் இருநாள் பயிற்சி நடாத்தப்பட்டுள்ளது.





- கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர்களது வேலைகள் தொடர்பான இலக்குகளை நிர்ணயித்து செயற்திட்டங்களை முன்னெடுத்துச் செல்லும் வழிமுறைகள் தொடர்பான திறனை மேம்படுத்தும் நோக்கில் பிரதேச கிராமக்கிளைகளில் பணியாற்றுவரும் கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் உள்ளிணைத்து 02.07.2018 ம் திகதி இணைப்பாளர் திரு.ச.செந்துராசா அவர்களினால் விழிப்புணர்வுக் கருத்தரங்கு நடாத்தப்பட்டுள்ளது.





- நிறுவனக் கட்டமைப்புக்கள் தொடர்பாகவும், கிராம மட்ட, பிரதேச மட்டத்தில் நிர்வாகிகளது கடமைகள், பொறுப்புக்கள், கண்காணிப்பு முறைமைகள் தொடர்பாக 6 பிரதேச நிர்வாக உறுப்பினர்கள் 66 பேரையும் உள்ளிணைத்து இணைப்பாளர் அவர்களினால் இரு பயிற்சிகள் நடாத்தப்பட்டுள்ளது.





- செயற்பாட்டு முன்னேற்றம் குறித்தும், செயற்பாடுகளை முன்னெடுத்துச் செல்வதில் காணப்படும் நடைமுறைப் பிரச்சினைகள், திட்டத்தின் பின்னடைவுகள் குறித்து ஆராய்ந்து அவற்றுக்கான தீர்வுகளை வழங்கும் நோக்கில் அமைப்பினால் மாதாந்த மீளாய்வுக் கலந்துரையாடல்கள் தலைவர் திரு.வ.பரமசிங்கம் அவர்களின் தலைமையில் நடாத்தப்பட்டு வருகின்றது.





- கிராமமட்ட பணியாளர்களுக்கான வாராந்த மீளாய்வுக்கூட்டமானது பிராந்திய இணைப்பாளர் மற்றும், பிரதேச அபிவிருத்தி உத்தியோகத்தர்களினால் வாராந்தம் பிரதேச அலுவலகங்களில் நடாத்தப்பட்டு பிரதேச, கிராம மட்டத்தில் காணப்படும் குறைபாடுகள், பின்னடைவுகள் குறித்து ஆராயப்பட்டு அவற்றுக்கு தீர்வுகாணும் நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

- ஒவ்வொரு திணைக்கள ரீதியாகவும் காணப்படும் பிரச்சினைகள் குறித்து உடனுக்குடன் நடவடிக்கைகளை மேற்கொள்ளும் நோக்கில் வாரத்தில் 2 நாட்களும், அவசிய தேவை ஏற்படும் சந்தர்ப்பத்திலும் முகாமைத்துவசபை ஒன்றுகூடி பிரச்சினைகளை ஆராய்ந்து அவற்றுக்கான தீர்மானங்களை மேற்கொண்டு வருகின்றது.

- கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கான ஊக்குவிப்பு கொடுப்பனவு வழங்கும் நிகழ்வானது 15.03.2018ம் திகதி தலைவர் திரு.வ. பரமசிங்கம் அவர்களின் தலைமையில் நடாத்தப்பட்டு இவர்களின் வியாபார நடவடிக்கைகளுக்கான சிறு ஊக்குவிப்புத்தொகை அமைப்பினால் வழங்கிவைக்கப்பட்டது.



